# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2071/19 - 2018 මැයි මස 16 වැනි බදාදා - 2018.05.16

*2071/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம் (அதிகாரம் 417)**

உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 417) 16 ஆம் பிரிவின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

கொழும்பு,
2018, மே 16.

**ஒழுங்குவிதிகள்**

2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதிய 1969/57 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட, 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆம் திகதி 1607/18 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட, 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்கு விதிகள் 9 ஆம் மற்றும் 10 ஆம் ஒழுங்குவிதிகள் மேலும் பின்வருமாறு இத்தால் திருத்தியமைக்கப் படுகின்றன.

1. ஒழுங்குவிதி 9 இனை இரத்துச்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் புதிய ஒழுங்குவிதியினைப் பதிலீடு செய்வதன் மூலம்

**முதனிலை வணிகர்களின் சோதனை மற்றும் நுண்ணாய்வு**

9. (1) மத்திய வங்கியின் வங்கியல்லா நிதிசார் நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளர், முதனிலை வணிக ரொருவரை மேற்பார்வை மற்றும் சோதனை செய்யலாம் அல்லது ஒவ்வொரு முதனிலை வணிகர் கம்பனியினதும் ஏடுகளையும் கணக்குகளையும் பரிசோதிப்பதற்கு அவரது திணைக்களத்தின் பரீட்சகர் ஒருவரைத் தூண்டலாம் என்பதுடன் முதனிலை

வணிகர்களிலான அலுவல்களின் நடாத்துதல் முதனிலை வணிகரின் வாடிக்கையாளரின் அக்கறைக்கு அல்லது முதனிலை வணிகர் முறைமைக்கும் பங்கமில்லை என்றும் அத்துடன் அல்லது முதனிலை வணிகர் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள், தொழிற்பாட்டுக் கையேடு, நடத்தைக் கோவை, வழிகாட்டி நெறிகள் மற்றும் வேறு ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கிணங்க செயலாற்றுகின்றதென்றும் உறுதிப்படுத்துகின்ற நோக்கத்திற்கென முதனிலை வணிகரொருவரின் ஏதேனும் விசேட கருமம் அல்லது செயற்பாட்டை நுண்ணாய்வு செய்யலாம்.

(2) முதனிலை வணிகர் கம்பனிகள் இலத்திரனியல் மற்றும் காந்தப்புல ஊடகத்தில் பேணப்படும் பதிவுகள் உட்பட தனது புத்தகங்கள், கணக்குகள், பதிவேடுகள், கோப்புகள் மற்றும் முதனிலை வணிகரொருவராக தனது செயற்பாடு தொடர்பில் பேணப்படும் வேறு பதிவுகளையும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு கிடைக்கக்கூடியதாகச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், (1) ஆம் பந்தியில் எடுத்துக்காட்டப்படும் நோக்கத்திற்கென தேவைப்படுத்தப்படக்கூடியவாறான ஏதேனும் தகவலை சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அல்லது அவரது திணைக்களத்தின் வேறு எவரேனும் பரிசோதகர் ஒருவருக்கு முதன்மை வணிகர் கம்பனியின் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் காசு இருப்பு, அதன் கிடைக்கத்தக்க சொத்துக்கள், மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் அதன் பொதுவான நிலமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் கோரிக்கைவிடுக்கும் போது சோதனையினை மேற்கொள்வதற்காக, முதனிலை வணிகர் நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது பணியாளர் ஒவ்வொருவரும் பூரண ஒத்துழைப்பு வழங்குவது அவர்களின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(4) முதனிலை வணிகர்களான என நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர் செயற்பாடுகள் தொடர்பான பரிசோதனை மற்றும் விசாரணை நாணய விதிச் சட்டத்தின் (அதிகாரம் 422) 29 ஆம் பிரிவின் நியதிகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2. 10 ஆவது ஒழுங்குவிதியினை இரத்துச்செய்து, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய ஒழுங்குவிதியினை பதிலீடு செய்வதன் மூலம்

**"முதனிலை வணிகர்களின் செயலாற்றுகைகளைத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்தலும் மதிப்பீடு செய்தலும்"**

**10.** (1) மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரானவர் ;

(அ) முதனிலை கம்பனிகளின் செயலாற்றுகையினை பின்வருவனப் மீது காலாந்தர ரீதியாக ;

I. பிணையங்களின் முதனிலை ஏலங்களில் அவரது காத்திரமான பங்குபற்றுதல்
II. பிணையங்களின் இரண்டாம் தரச் சந்தையொன்றை உருவாக்குதலும் பேணுதலும்.
III. ஏற்புடையதான சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகள், வழிகாட்டு நெறிகள் மற்றும் நடத்தைக் கோவை களுடனான இணங்கியொழுகுதலின் பதிவு.

(ஆ) அத்தகைய மதிப்பீட்டு நெறியில் கண்டுபிடிக்கப்படும் ஏதும் குறைபாடுகளை முதனிலை வணிகர் கம்பனிகளுக்கு அறிவித்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய முதனிலை வணிகர் கம்பனிகள் அத்தகைய குறைபாடுகளுக்கு பரிகாரமாக வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரினால் சிபாரிசு செய்யப்படக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(இ) முதனிலை வணிகர்களை காலத்திற்குக் காலம் அல்லது முதனிலை வணிகர் செயலாற்றத்தின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் மதிப்பிடுதல் நோக்கத்திற்காக,

*(i)* முதனிலை வணிகர் கம்பனி ஒன்றின் விவகாரங்கள் பற்றிய மெய்யான நிலவரத்தினை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக முதனிலை வணிகர் கம்பனி ஒன்றிலிருந்து அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டுமென கருதப்படக் கூடியவாறான கம்பனியின் வியாபாரம் அல்லது விவகாரங்களுடன் தொடர்புடைய அத்தகைய கூற்று அல்லது தகவல்களை காலத்திற்குக் காலம் அல்லது அவரால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியில் சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் முதனிலை வணிகர் கோருதல் வேண்டும்.

*(ii)* முதனிலை வணிகர் கம்பனியின் அத்தகைய கணக்காய்வாளரினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகள் தொடர்பில், மேலே பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக, ஏதேனும் தகவல் ஒன்றினை அவர் அவசியம் பெற்றுக் கொள்ள வேண்டுமென கருதுகின்ற சந்தர்ப்பத்தில், அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள் ஏதேனும் முதனிலை வணிகர் கம்பனியின் கணக்காய்வாளரைக் கோருதல் வேண்டும்.

*(iii)* அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கூற்றுக்கள் அல்லது தகவல்களின் துல்லியத் தன்மையினை சரி பார்க்கும் நோக்கத்திற்காக அக்கம்பனி வைத்துள்ளதும், ஏதேனுமொரு முதன்மை வணிகர் கம்பனி ஒன்றினால் அவசியம் என கருதும் புத்தகங்கள் மற்றும் கணக்குகளை பரிசோதித்தல் அல்லது அவரது திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவரை கோருதல் வேண்டும்.

(2) முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதனிலை வணிகர் நடவடிக்கைகளின் செயலாற்றுகை தொடர்பான தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் மதிப்பீடானது நாணய விதிச் சட்டத்தின் (அதிகாரம் 422) பிரிவு 29 அ இன் கீழுள்ள நியதிகளுக்கு அமைய அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வங்கி மேற்பார்வைகள் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

6- 152

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.